ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2444/08 - 2025 ජූලි මස 07 වැනි සඳුදා - 2025.07.07

2444/08 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: திபிராலே/1/8/3/99 அத்.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2021/HW/28.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மெரின்டிரய்வ் வீதி செயற்திட்டத்தின் கீழ் கொள்ளுப் பிட்டி தொடக்கம் காலி முகத்திடல் வரையிலான வீதிப் பகுதியின் கட்டுமாணப் பணிகளுக்காக காணியை எடுத்துக் கொள்ளல் (கி. மீ. 1 + 200 - 2 + 500)

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், (பிரிவு இல. 37, கொழும்பு மாநகர சபை பிரதேச வரையறைக்குட்பட்ட) காலி முகத்திடல் கிராம அலுவலர் பிரிவில், கொள்ளுப்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 520425, மற்றும் 2024.12.26 ஆந் திகதியைக் கொண்டமைந்த காணித்துண்டு இல. 1 இலிருந்து 06 வரை காட்டப் பட்டுள்ள காணித்துண்டுகளின் விஸ்தீரணம் 0.6533 ஹெக்டயார் மட்டும் ஆகும். அத்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

1. **துண்டு இல. 1**
காணியின் பெயர்: இந்து சமுத்திரம்; விபரம்: கடல், கைவிடப்பட்ட பாலத்தின் ஒரு பகுதி; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.5978 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 2**
காணியின் பெயர்: கண்டுபிடிக்கமுடியவில்லை, வரிப்பண இல. 02, 23 ஆவது ஒழுங்கை; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: ஸ்ரீலங்கா இராணுவ முகாம்; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 3**
காணியின் பெயர்: கண்டுபிடிக்கமுடியவில்லை, வரிப்பண இல. 06, 23 ஆவது ஒழுங்கை; விபரம்:

வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: எஸ். பி. பொன்சேகா மற்றும் ஏ. ஏ. எஸ். ஜே.பொன்சேகா, இல. 578, காலி வீதி, கொழும்பு 03; விஸ்தீரணம்: 0.0013 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 4**

காணியின் பெயர்: கண்டுபிடிக்கமுடியவில்லை, வரிப்பண இல. 10, 23 ஆவது ஒழுங்கை; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: எல். பி. ஜயவர்தன, இல. 15/1, 10 ஆவது ஒழுங்கை, கொழும்பு 03; விஸ்தீரணம்: 0.0092 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 5**

காணியின் பெயர்: கண்டுபிடிக்கமுடியவில்லை, வரிப்பண இல. 20, 23 ஆவது ஒழுங்கை; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: ஏ. ஏ. டீ. இந்திரலதா, இல. 630/3, ஸ்ரீ சுபூதி வீதி, பத்தர முல்லை; விஸ்தீரணம்: 0.0205 ஹெக்டயார்.

**6. துண்டு இல. 6**

காணியின் பெயர்: கண்டுபிடிக்கமுடியவில்லை; விபரம்: புகையிரத செயற்பாடுகள்; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்கமுடியவில்லை; விஸ்தீரணம்: 0.0243 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுகத் சிசிர குமார,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
2025, யூலை 04.

EOG 07 - 0067

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இல.: 6/3/7/15/8/2/45.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் தொடர்பு இல.: 4-3/10/2019/MV/183.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2435/11 ஆம் இலக்கம் மற்றும் 2025.05.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் பட்ட நிலஅளவையாளர் தலைமை அதிபதியின் நிலஅளவைப்பட இலக்கம் 310224, அநுபந்த இல. 02 மற்றும் பத்திர இல. 01 இல் குறிப்பிடப் பட்டுள்ள காணித்துண்டிலக்கம் 01, 02 மற்றும் 03 ஆகிய காணிப்பகுதிகளுக்கான உரித்து பரிசீலனை செய்யப்படும் திகதி 2025.08.06 ஆந் திகதியாக மாற்றப்பட வேண்டும் என்றும், குறிப்பிடப்பட்ட காணியிற்காக உரிமை கோருபவர்கள் 2025.07.31 ஆந் திகதிக்கு முன் தமது உரிமைகளை உறுதிப் படுத்துவதற்கு உரிய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்றும் இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2025, யூலை 02.

EOG 07 - 0068

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இல.: 6/3/7/15/5/7/8.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் தொடர்பு இல.: 4-3/10/2020/MV/109.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2435/11 ஆம் இலக்கம் மற்றும் 2025.05.08 ஆந்

திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் பட்ட நிலஅளவையாளர் தலைமை அதிபதியின் நிலஅளவைப்பட இலக்கம் 310208, அநுபந்த இல. 03 மற்றும் பத்திர இல. 01 இல் குறிப்பிடப் பட்டுள்ள காணித்துண்டிலக்கம் 01 எனும் காணிப் பகுதிக்கான உரித்து பரிசீலனை செய்யப்படும் திகதி 2025.08.06 ஆந் திகதியாக மாற்றப்பட வேண்டும் என்றும், குறிப்பிடப்பட்ட காணியிற்காக உரிமை கோருபவர்கள் 2025.07.31 ஆந் திகதிக்கு முன் தமது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங் களை சமர்ப்பித்தல் வேண்டும் என்றும் இத்தால் அறிவிக்கின்றேன்.

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2025, யூலை 02.

EOG 07 - 0069